# அனல்

புதுமலர்: 11 இதழ்: 02 பங்குனி - சித்திரை

## அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்

## ஆவியிலே அனலாயிருங்கள்

## கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்

- ரோமர் 12:11 -

ஆசிரியர்:
வே.மகாராஜா

சீயோன் தேவாலயப் பிரசுரம்
ZION CHURCH PUBLICATION

01.03.2014

# பொருளடக்கம்


- அனலின் குரல்
- கதையும் கற்றதும் - நீயும் சிக்கிக்கொண்டாயோ?
- வாலிபர் வளாகம் - அச்சுறுத்தும் கேள்வியும்; ஆண்டவரின் அன்பும்!
- வினா விடை - 62
- பாவ மன்னிப்பாகிய மீட்பு
- பெண்கள் பக்கம் - இவள் ஒரு சீஷி
- நற்செய்திப்பகுதி - தேடி வந்த ஜீவ ஒளி
- பக்தர்களின் பயிலகம்
- குறுக்கெழுத்துப் போட்டி - 60
- மன்னிப்பும் சந்தோஷமும்
- அருட்பணியாளர் சரிதை - வில்லியம் வில்பர்போர்ஸ், ஜான்ஹார்ப்பர்
- அனலின் ஆன்மீக விருந்து


## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.

### எழுத வேண்டிய விலாசம்

சீயோன் ஜெபக்குழு,
347, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

**Zion Prayer Group,**
**347, Navalar Road,**
**Jaffna, Srilanka.**

### மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

The Editor "Anal",
347, Navalar Road,
Jaffna, Srilanka.

ஆசிரியர் "அனல்",
347 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

*T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk*

திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன்,
உன் விதவைகள் என்னை நம்புவார்களாக. எரேமியா 49:11

# அன்பின் குரல்



**இயேசு கிறிஸ்துவுக்குள் அன்பான வாசகர் களுக்கு, அன்பின் வாழ்த்துக்கள்!.**

இவ்வாண்டின் இரண்டாவது சஞ்சிகையூடாக உங்களைச் சந்திக்க கிருபை செய்த ஆண்டவர் இயேசுவுக்கு மகிமையுண்டாகட்டும்.

மோசே எனப்படும் தேவனுடைய மனிதன் தான் பெரியவனான போது ஒரு முடிவுக்கு வந்தார்; **பார்வோனுடைய குமாரத்தியின் மகன் எனப்படுவதை வெறுத்தார் (எபிரெயர் 11:24).** மோசே வளர்ச்சியோடு ஆவிக்குரிய வளர்சியையும் அடைந்தார். **எபிரெயர் 11:25 சொல்கின்றது; அநித்தியமான பாவ சந்தோசங்களை அனுபவிப்பதைப் பார்க்கிலும், தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அனுபவிப்பதையே தெரிந்து கொண்டு...**

எத்தனையோ கிறிஸ்தவர்கள் வளர்ந்து வரும் கால கட்டங்களில் பாவ சந்தோசத்தின் காரணமாக கிறிஸ்துவை விட்டு விடுகின்றார்கள், தேவனுடைய அன்பை மறக்கிறார் கள், தேவ சித்தத்தை மறுதலிக்கிறார்கள். இந் நாட்களில் சிறுபிராயத்தில் நல்லவர்களாக காணப்பட்ட அநேகர், சிறுபிராயத் தில் ஆலயத்திற்கு ஒழுங்காக வந்து தேவனை ஆராதனை செய்த அனேகர், வாலிபர்களாய் வளர்ந்த பின்பு சொல்ல முடியாத பாவத்திற்குள் வீழ்ந்து பாவ சந்தோசத்தைத் தேடுகிறார்கள், ஆண்டவரை மறக்கிறார்கள்.

அன்பான வாசகர்களே, நீங்கள் கர்த்தருக்குள் வளருங்கள், ஆவிக்குரிய முதிர்ச்சியை அடையுங்கள். தேவனுடைய இதயத்தை அறியுங்கள். அவருக்காக விட வேண்டிய அனைத்தையும் விட்டுவிடுங்கள். அந்த ஆண்ட வருக்காக செய்ய வேண்டிய அனைத்தையும் செய்யுங்கள். **இந்த மோசேயைத் தான் எகிப்தின் அடிமைத்தனத்தை உடைக்க தேவன் வல்லமையான பாத்திரமாக பயன்படுத்தினார். தேவன் பயன்படுத்தும் சிறந்த பாத்திரமாவதற்கு தேவனுக்கேற்ற சிறந்த முடிவுகளை எடுத்துக் கொள்ளுங்கள்.**

– ஆசிரியர் –




நேரம் மாலை 4:30ஐத் தாண்டி இருந்தது. மோகன் ஒரு தனியார் அலுவலகத்தில் காசாளராக பணிபுரிந்து கொண்டிருக்கிறார். அவசர அவசரமாக அன்றைய வேலையை முடித்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்த மோகன் மிகுந்த களைப்புடன் தனது மோட்டார் வண்டியை நிறுத்தி விட்டு தனது அன்பு மனைவி மோன்சியை அழைத்தார்.

*மோன்சி.... மோன்சி.... என்னப்பா பண்றீங்க.... இங்க வாங்க......*

மனைவியின் சத்தத்தைக் காணவில்லை. என்னவோ மனைவி வீட்டில் சமையல் வேலையில் ஆழ்ந்திருப்பாளாக்கும் என அவர் தன் மனதிற்குள் எண்ணினாலும், ***வீட்டிற்குள் இருந்து தொலைக்காட்சியின் சத்தம் சற்று அதிகமாகவே அவரது காதிற்குள் விழுந்தது.***

அவரது வீட்டில் அவர், மனைவி, 04ஆம் தரத்தில் கல்வி கற்கும் மகள் மற்றும் அவரது தாய் ஆகியோர் வாழ்ந்து வருகின்றார்கள். மனைவி மிகவும் அன்பானவள், தாய் இப்போதும் இவரில் அளவு கடந்த பாசம் உள்ளவள். மகளுக்கும் இவர் வீட்டில் இல்லையென்றால் சாப்பாடு தொண்டைக்குள் இறங்காது. மிகவும் அழகிய குடும்பம். ஒழுங்காக ஆலயத்திற்கு செல்வார்கள், ஜெபிப்பார்கள், வேதம் வாசிப்பார்கள். மற்றவர்கள் பார்த்து ஆச்சரியப்படுமளவுக்கு இவர்கள் வாழ்ந்து வந்தார்கள்.

ஆனால் அடிக்கடி இவர்கள் வீட்டில் சிறு சச்சரவு ஏற்படும். அது வேறொரு பிரச்சினைக்காகவும் அல்ல, இவர்கள் வீட்டில் இருக்கும் தொலைக்காட்சியினால் தான் அந்த பிரச்சினை ஏற்படும். ஆம், மோன்சி எவ்வளவு தான் குடும்பத்திற்கு ஏற்ற பெண்ணாக இருந்தாலும், வீட்டில் என்னென்ன காரியங்கள் செய்ய வேண்டும், கணவனுக்கு என்ன செய்ய வேண்டும், பிள்ளைக்கு என்ன செய்ய வேண்டும், மாமிக்கு என்ன செய்ய வேண்டும் என்று பார்த்து பார்த்து செய்ய

அறிந்திருந்தாளோ அதே போன்று தொலைக்காட்சியில் வரும் நிகழ்ச்சி நிரல்களையும் மனப்பாடம் செய்து வைத்திருந்தாள். மோகன் காசாளராக பணிபுரிவதினால் சில வேளை அலுவலகத்தில் ஓய்வாக இருக்கும் நேரங்களில் கடந்த காலத்தை சிந்திக்கும் போது அவருக்கு தன் மனைவியை நினைத்தால் சிரிப்புத்தான் வரும். ஏனென்றால் அவர் கூட சில வேளை அதிக வேலை நேரங்களில் காசுப்பதிவுகளை மறந்து திண்டாடுவதுண்டு. ஆனால் மோன்சி எப்படி இப்படி சாதாரண நிகழ்ச்சிகளையெல்லாம் நினைவில் வைத்திருக்கிறாளோ?

அத்துடன் மோகன் ஒரு சமூக சீர்திருத்தவாதியாகவே இருந்தார். ஆனால் அவரால் தன் மனைவியைத் தான் தன் வழிக்கு கொண்டு வரமுடியவில்லை. ஏனென்றால் மனைவிக்கு துணையாக வீட்டில் இவரது தாயும் சேர்ந்திருந்தாள். தாய் தனக்கு வயது சென்றதால் பொழுதைப் போக்குவதற்கு தொலைக்காட்சியைத் தவிர வேறொன்றும் இல்லையென்று தப்புக் கணக்கு போட்டிருந்தாள். மோகன் என்றாலும் பரவாயில்லை, பெரியவர், ஆனால் மகள் தான் பாவம், சின்னவள் இவர்களது பிரச்சினைக்குள் சிக்குப்பட்டுத் தவித்தாள். மோகனின் அலுவலகத்தில் கடமையாற்றும் நான்சி எப்போதும் கைத்தொலைபேசியுடன் நேரத்தைச் செலவிட்டுக் கொண்டிருப்பதை பார்க்க இவருக்கு பொறுத்துக் கொள்ள முடியவில்லை. இதனால் அவளால் தன் அலுவலக கடமைகளைச் சரியாய் செய்ய முடிவதில்லை, அவள் தனது இருக்கையில் அமர்ந்து அலுவலக கோப்புக்களை சரி செய்வதைப் பார்க்கிலும் தொலை பேசியில் குறுந்தகவல்களை (SMS) அனுப்புவதிலும் பெறுவதிலேயுமே அதிக நேரத்தை செலவிடுவாள். இதனைப் பார்க்கும் சக ஊழியர்கள் தமக்கு ஏன் என்று விட்டுவிடுவார்கள். ஆனால் மோகன் தான் சீர்திருத்தவாதியாச்சே!, ஒரு நாள் மதிய உணவு நேரம் நான்சியை தனது அறைக்குள் அழைத்து அவளது சகோதரன் போன்று அவளுக்கு நல்ல அறிவுரையைக் கூறினார். தொலைபேசியை தேவையற்றவிதத்தில், பொழுது போக்காக பயன்படுத்தாமல் தேவைக்கு ஏற்ப பயன்படுத்துமாறு பக்குவமாய் கூறினார். என்ன ஆச்சரியம், நாளடைவில் நான்சியும் தன் தவறை உணர்ந்து தன் நல்வழியில் நடக்கலானாள்.

இப்படியெல்லாம் சமூகத்தை திருத்தும் மோகனால் மனைவியைத தான் திருத்தமுடியவில்லை, அன்றைக்கும் இப்படித்தான் அலுவலகத்தில் வேலை அதிகமாக இருந்தமையால் அனைத்தையும் முடித்துவிட்டு ரியூசனுக்கு சென்ற மகளை எப்படியும் மனைவி ஏற்றி வந்திருப்பாள் என்ற எண்ணத்துடன் வீட்டிற்கு வந்தவருக்கு மகளைக் காணமுடியவில்லை, மனைவியை கூப்பிட்ட இவருக்கு அவளின் சத்தத்தையும் கேட்கமுடியவில்லை, மாறாக தொலைக்காட்சி சத்தம் தான் கேட்டது.

எனவே கலவரத்தோடு வீட்டிற்குள் நுழைந்தார். இவர் வந்ததைக் கூட அறியாமல் மனைவியும், தாயும் தொலைக்காட்சி தொடர் நாடகத்தில் மூழ்கியிருந்தனர். இதனைப் பார்த்த மோகன் கோபத்தின் உச்சிக்கே சென்றுவிட்டார். மோகன் கொஞ்சம் சத்தத்தை உயர்த்தி: என்ன மோன்சி, பிள்ளையை ஏற்றப் போகாமல் என்ன செய்து கொண்டிருக்கின்றாய், இந்த தொலைக்காட்சிப் பெட்டியை முதலாவது வீட்டை விட்டு வெளியேற்ற வேண்டும் என்று கத்தினார். அப்போது அவனது தாய் (தன்னையும் சேர்த்து): உனக்கு என்னடா, வேலை பார்க்கிறாய், அலுவலகம், வெளியே என்று பொழுது போகும், பாவம் அவள், என்ன செய்வாள், வீட்டு வேலை என்று இருக்கிறவளுக்கு இந்தப் பொழுது போக்கும் இல்லாவிட்டால் என்ன செய்வது என்று மருமகளுக்கு வக்கீலாக மாறினாள்.

மோகனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை, தனது கோபத்தை அடக்கியவராக, அமைதியாக திரும்பச் சென்று மகளை ரியூசனில் ஏற்றி வரச்சென்றார். மோகன் எதுவும் பேசாது அமைதியாக திரும்பச் சென்ற செயல் மோன்சியின் இருதயத்தில் ஈட்டியால் குத்தியதைப் போன்று இருந்தது. தனது அற்ப பொழுது போக்கிற்காக பிள்ளையை கூட ஏற்றச் செல்லாமல் இருந்து விட்டேனே என்று மோன்சி மிகவும் வெட்கப்பட்டாள். அன்றே, தான் இனிமேல் இவ்வாறான செயல்களில் ஈடுபடாமல் நல்ல மனைவியாக இருக்க வேண்டும் என்று மனதில் தீர்மானம் பண்ணவும் மோகனின் மோட்டார் சைக்கிள் சத்தம் கேட்கவும் சரியாக இருந்தது.

*ஆம் பிரியமான நண்பர்களே, தொழில்நுட்பம் வளர்ச்சி அடைந்துள்ள இக் காலத்தில் இவற்றை தவறாக பயன்படுத்தி அனேக குடும்பங்கள் சின்னாபின்னமாகிக் கொண்டிருக்கின்றன. தொலைபேசியினால் தொலைந்து போன வாழ்க்கைகள் எத்தனை? தொலைக்காட்சி தொல்லையாகிப் போன வீடுகள் எத்தனை? இணையத் தளம் பிணைத்து விட்ட பாவங்கள் எத்தனை? எனவே தொழில்நுட்பம் நல்லது தான் ஆனால் அதனை தேவைக்கேற்ப பயன்படுத்தி அது நம்மை ஆளுகை செய்யாமல், நாம் அதனை ஆளுகை செய்வோமா?*

வை.விமல்

---

*அன்பு வாசகர்களே!,*

*தாமதமின்றி சஞ்சிகைப் பிரதியைப் பெறுவதற்காக உங்கள் சந்தாக்களை புதுப்பித்துக் கொள்வதுடன்; மற்றவர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்!*



# அச்சுறுத்தும் கேள்வியும்; ஆண்டவரின் அன்பும்!

**இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள்!**


என் அருமை வாலிப உள்ளங்களில் எழுகின்ற பல விதம் விதமான கேள்விகளிற்கு சத்திய வசனத்தின் அடிப்படையிலும் பரிசுத்த ஆவியானவரின் வெளிச்சத்திலும் ஆராய்ந்து தேவ சாயலை அடைவோமாக.

**கேள்வி:- நான் இரட்சிக்கப்பட்டிருக்கிறேன். எனது பெற்றோர் இரட்சிக்கப்படவில்லை; நான் சிறுவனாக இருந்த போது எனது பெற்றோர் எனது முறை மச்சாளுக்கு என்னை தருவதாக வாக்களித்து உள்ளனர். இப்போது எனது பெற்றோர் இரட்சிக்கப்படாத அப் பெண்ணை மணக்குமாறு கூறுகின்றனர்; நான் என்ன செய்ய?**

**பதில்:-** அவிசுவாசியுடனே விசுவாசிக்குப பங்கேது! **11கொரிந்தியர் 6:14-15 (14.) அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக; நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? 15. கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது?** வேதம் இதனை வன்மையாகக் கண்டிக்கிறது. பழைய ஏற்பாட்டிலும்

நெகேமியா தேவ ஜனங்களின் அலங்கோலமான மண வாழ்வை கண்டு கொர்தித்து எழும்புகின்றார். கூடவே, அப்பேற்பட்டவர்களுக்கு நடவடிக்கை எடுக்கின்றார்.

சிறப்பான ஓர் திருமணத்தை நடத்தி முடித்த பெருமை அது தேவனையே சாரும். முதன் முதலாக ஆதாமுக்கு ஏவாளை ஏற்படுத்தி தனது திட் டத்தை இருவருக்கும் கைய ளிக்கின்றார். (ஆதா முக்கு மட்டும் அல்ல) ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்கிற்கு பெண் கொள்ளும் போதுகூட தேவவிருப் பத்தையும், தனக்கு வரும் மருமகள் தெய்வ பக்தி உள்ளவளா கவும், உல கத்திலி ருந்து பிரிந்து வாழ தன்னை அர்ப்பணித தவளாகவும் இருப் பதில் அவதானமாய இருந்தார்.




சகோதரனே இயேசுகிறிஸ்து வின் இரத்தம் உம்மை சுத்திகரித்ததையும் (பாவங்களை நீக்கி) தனது பிள்ளையாய் உம்மை மாற்றியுள்ளதையும் உறுதியாய் நம்புகிறீரா? கிறிஸ்துவின் அன்பை விட்டு உம்மை பிரிக்கும் எந்தக் காரியத் திற்கும் (திருமணத்திற்கு மாத்திரம் அல்ல) இடம் கொடாமல் வாழ முழுமையான அர்ப்பணிப்பு அவசியம்.

**"தகப்பனையும், தாயையும் கனம் பண்ணுவாயாக"** கட்டளையாக கொடுத்துள்ள வேதம்; **கொலோசெயர் 3:20-21 (20.) பிள்ளைகளே, உங்களைப் பெற்றாருக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படியுங்கள்; இது கர்த்தருக்குப் பிரியமானது. 21. பிதாக்களே, உங்கள் பிள்ளைகள் திடனற்றுப் போகாதபடி, அவர்களுக்குக் கோபமூட்டா திருங்கள்.**

இவ் இரண்டு வசனங்களிலும் இரண்டு காரியங்கள் மிக முக்கிய மாக அழுத்தி கூறப்படுகின்றது.

**01. கர்த்தருக்குப் பிரியமான கீழ்ப்படிவு**

**02. குடும்பத்தின் தலை, தகப்பனானவன் பிள்ளைகளிற்கு மனக்கசப்பை ஏற்படுத்தவும், ஊக்கம் இழக்கவும் செய்யக் கூடாது.**

பெற்றோர் இரட்சிக்கப் படவில்லை என்று சொல்கின்றீர். ஆகவே உமது நிலமையை மிகவும் பணிவுடனும், பொறுமையாகவும் தெளிவாகவும் தாய்க்கும் தகப்பனுக்கும் ஆறுதலாக விளக்கிக் கூறுவீராக.

எப்பேற்பட்ட காரியமானாலும், கடினமான சூழ்நிலைக்கு நீ தள்ளப்பட்டாலும் அவிசுவாசியை மணக்க நீங்கள் திட்டமாய் மறுக்கலாம். இரட்சிக்கப்பட்ட வாலிபர்கள் இரட்சிக்கப்படாதவர்களோடு காதலில் விழுந்தால் அதை அடியோடு உடனடியாக மறுத்து விடுங்கள்; முடிவு ஆபத்தானது. திருமணத்திற்கான ஞானஸ்நானம் மகா கொடியது. (உண்மையான மனந்திரும்புதலைக் குறித்து கூறவில்லை).

இன்று கிறிஸ்தவ குடும்பங்களைப் போட்டு ஆட்டு ஆட்டுகின்ற ஓர் பெரிய சவால்: பரிசுத்த மெய் விவாகமாகும். இதற்கு தேவ ஊழியர்களின் குடும்பமும் விதிவிலக்கல்ல. காரணம்; சத்துருவானவன், தந்திரமாய் - ஞானமாய் **பரிசுத்த வித்துத் தேசங்களின் ஜனங்களோடே கலந்து போயிற்று (எஸ்றா 9:2)** பணம், பொருள், அந்தஸ்து, வசதி வாய்ப்பு, குலப்பெருமை இன்று தேவன் விரும்பும் மெய் விவாக நிலைக்கு பாரிய சத்துருவாய் மதில் போல அரக்கனாய் நிற்கிறான்.

> “ ”
> **தேவனுடைய பாதத்தில் ஜெபியுங்கள், கிறிஸ்துவையும் அவர் இரத்தத்தினால் சம்பாதித்த திருச்சபை ஐக்கியத்தையும் விட்டுவிட ஒரு போதும் தீர்மானிக்க வேண்டாம்.**

**தேவனுடைய பாதத்தில் ஜெபியுங்கள், கிறிஸ்துவையும், அவர் இரத்தத்தினால் சம்பாதித்த திருச்சபை ஐக்கியத்தையும்விட்டுவிட ஒரு போதும் தீர்மானிக்க**

**வேண்டாம்.** நாடுவிட்டு நாடு போயும், மாவட்டம் விட்டு மாவட்டம் போயும் நீ தேவ ஆசீர்வாதம் பெற்று வாழ்வது கேள்விக்குறியாகும். இரட்சிக்கப்படாதவர்களை திருப்திப்படுத்த/ சாந்தப்படுத்த நீங்கள் கிறிஸ்துவின் வேதாகம வார்த்தையை விட்டு ஒரு போதும் விலகி செல்ல வேண்டாம், அது பாவம்.

வேத வசனத்தின் படி உங்களிற்கு கூறும் புத்திமதி என்னவெனில் உங்களை இரட்சித்த ஆண்டவரை அவமதிக் காமல் (தூஷிக்காமல்) இரட்சிக்கப்பட்ட ஓர் துணைக்காகவே உறுதியாய் நில்லுங்கள். தேவ சித்தம் நிறைவேற வாழ்வை முழுமையாய் கையளியுங்கள். ஏற்ற துணையை தருபவர் தேவன் மாத்திரமே.

**போதகர்**
**வேதநாயகம் சுமணன்**

## வினா விடை - 62

*01.* தன் தம்பியை விற்றவன் யார்?

*02.* அண்ணனால் கொல்லப்பட்ட தம்பி யார்?

*03.* கர்த்தர் தன்னை விட்டு விலகினதை அவன் அறியாதிருந்தான் அவன் யார்?

*04.* கர்த்தருக்கு முன் கடுங்கோபங்கொண்ட தீர்க்கதரிசி யார்?

*05.* பெரிய வீடுகள் எல்லாவற்றையும் அக்கினியால் சுட்டெரித்த அரசன் யார்?

*06.* ஏமாற்றினவன் ஏமாறினதெங்கே?

*07.* கர்த்தரின் நாமத்தை நிந்தித்து தூஷித்தான் அவன் யார்?

*08.* தன் சகோதரரால் புகழப்படுகிறவன் யார்?

*09.* கர்த்தர் கடுங்கோபங்கொண்டதெப்போது?

*10.* தன் தம்பியினிமித்தம் கோபமடைந்தவன் யார்?




இன்று மனிதர்கள் தங்கள் பாவங்களை போக்குவதற்காக வித்தியாசம் வித்தியாசமான கிரியைகளை தங்கள் முயற்சியினாலும், பாரம்பரியங்களினாலும் விமோஷனத்தை அடைய முயற்சி செய்கின்றனர்.

**ஆனால் மனிதன் ஒன்றை நன்கு அறிய வேண்டும். இந்த உலகத்திலே பிறக்கின்ற எந்த மனிதனும் "பாவியாய்தான் பிறக்கின்றான்". ரோமர் 3:23 எல்லாரும் பாவஞ்செய்து.....**

மனிதன் தன்னுடைய பாவத்தை போக்குவதற்காக மிருக பலிகளை செலுத்தி வந்தான். ஆனால் அவற்றால் பாவத்தை முற்றிலுமாக நீக்கி சுத்தம்பண்ணவோ, சுத்த மனச்சாட்சியை உண்டுபண்ணவோ முடியவில்லை.

வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல தம்முடைய சொந்த இரத்தத்தி னாலும், ஒரே தரம் மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசித்து நித்திய மீட்பை உண்டுபண்ணினார்.



**இயேசுக் கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும். பாவங்களை நாம் அறிக்கையிட்டால் பாவங்களை நமக்கு மன்னித்து, எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் (இயேசு) உண்மையும் நீதியும் உள்ளவராய் இருக்கிறார்.**

**இன்று உன் வாழ்வில் பாவ மன்னிப்பின நிச்சயம் உண்டா? கிறிஸ்து உனக்காக ஆவலாய் காத்து நிற்கிறார். அவரண்டை வருவாயா மகனே! மகளே!.**

ரேமா

# இவள் ஒரு சீஷி!



## பெண்கள் பக்கம்

ஒரு சுப்பர் மார்க்கெட் வாசற் படியில் ஒரு சிறுவன் நின்ற வண்ணம் உள்ளே அழகாக அடுக்கப் பட்டிருந்த ரொட்டி வகைகளை பார்த்துக் கொண்டிருந்தான். அவன் ஒரு ஏழைச் சிறுவன்.

சுப்பர் மார்க்கெட்டில் பொருள் கள் வாங்கும்படி வந்திருந்த அம்மா ஒருவர் இந்தச் சிறுவனைப் பார்த்து காலில் செருப்புக்கூட இல்லாமல் கிழிந்த சட்டைகளோடு காணப்படுகின்றானே என்று நினைத்து வருந்தி, அவனை அழைத்துக் கொண்டு போய், அவனுக்கு வேண்டிய ஆடைகள், செருப்பு, உணவுப் பண்டங்கள் ஆகியவற்றை வாங்கிக் கொடுத்தார். கையில் பொருள்களை ஏந்தியவனாய் அந்த அம்மாளை அதிர்ச்சியோடு பார்த்து நின்றான்.



ஏன் தம்பி என்னை அப்படி பார்க்கின்றாய்? என்று கேட்டாள் அந்த அம்மா. அதற்கு அந்தப் பையன், அவளை நோக்கி; நீங்கள் இயேசுவின் தாயா? என்று கேட்டான். அதற்கு அவள் இல்லை நான் இயேசுவின் மகள் என்றாள். ஆலயத் தில் ஒரு நாள் போதகர் இயேசுவின் அன்பைப் பற்றி கூறினார். அவர் போன்ற

ஆட்களை இன்று வரை நான் பார்க்கவே இல்லை. ஆனால் உங்களிடம் அந்த அன்பு காணப்படுகின்றது என்றான். அந்த பெண் கர்த்தருக்கு ஸ்தோத்திரம், அவர் தான் இந்த உதவியை உனக்குச் செய்யும் ஆவியை எனக்குக் கொடுத்தார் என்றாள். பையன் சந்தோஷத்தோடு வீடு திரும்பினான்.

**யோவான் 12:21[b] இயேசுவைக் காண விரும்புகிறோம் என்று அவனைக் கேட்டுக கொண்டார்கள்.** இவ்வாறு சில கிரேக்கர்கள் கேட்டுக்கொண்டார்கள்.

**ஆம்! இன்றும் கூட அனேகர் இயேசுவைக் காண வேண்டும் என்று விரும்புகின்றார்கள். இயேசுவின் உண்மைப் பிள்ளைகளால் மட்டும் தான் அவருடைய அன்பைக் காண்பிக்க முடியும்.** ஒரு வேளை எப்படி என்று நீ சிந்திக்கலாம். <u>**நற்கிரியை**</u> மூலம் நாம் இயேசுவின் அன்பைக் காண்பிக்க முடியும்.

**“ ஆம்! இன்றும் கூட அனேகர் இயேசுவைக் காண வேண்டும் என்று விரும்புகின்றார்கள். இயேசுவின் உண்மைப் பிள்ளைகளால் மட்டும் தான் அவருடைய அன்பைக் காண்பிக்க முடியும். ஒரு வேளை எப்படி என்று நீ சிந்திக்கலாம். <u>நற்கிரியை</u> மூலம் நாம் இயேசுவின் அன்பைக் காண்பிக்க முடியும்.**

**அப்போஸ்தலர் 9:36 யோப்பா பட்டணத்தில் கிரேக்கப் பாஷையிலே தொற்காள் என்று அர்த்தங்கொள்ளும் தபீத்தாள் என்னும் பெயருடைய ஒரு சீஷி இருந்தாள்; அவள் நற்கிரியைகளையும் தருமங்களையும் மிகுதியாய்ச் செய்துகொண்டுவந்தாள்.** இந்த தபீத்தாள் ஒரு நாள் வியாதிப்பட்டு மரணமடைந்துவிட்டாள், என்று பேதுருவுக்கு சொல்லி அனுப்புகின்றார்கள். விதவைகளெல்லாரும் அழுது, தபீத்தாள் தங்களுடனே கூட இருக்கையில் தங்களுக்கு செய்து கொடுத்திருந்த அங்கிகளையும், வஸ்திரங்களையும் பேதுருவுக்கு காண்பித்தார்கள்.

**அப்போஸ்தலர் 9:40-42 (40.)** பேதுரு தபீத்தாளே, எழுந்திரு என்றான். அவள் தன் கண்களைத் திறந்து பேதுருவைப் பார்த்து உட்கார்ந்தாள். பரிசுத்தவான் களையும், விதவைகளையும் அழைத்து அவளை உயிருள்ளவளாக அவர்களுக்கு முன் நிறுத்தினான். இதைக் கண்ட அநேகர் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள்.

**தபீத்தாள் என்ற பெயருக்கு பெண்மான் என்று பொருள்.** இவள் ஒரு அழகான வாழ்க்கைக்குச் சொந்தக்காரி. வாழ்க்கையால் கிறிஸ்துவைப் பேசினாள். நற்கிரியைகளும், தானதர்மங்களுமே அவளுடைய வாழ்க்கையில் முதல் இடம். அவளு டைய மரணத்தை அவளால் தொடப்பட்ட விதவைகளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவளது அன்பிலும் அரவணைப்பிலும் இருந்தவர்கள் இப்போ தாங்கள் கைவிடப்பட்டதாக உணர்ந்தார்கள். தொற்காள் ஆதரவற்றோரை அரவணைக்கும் ஒரு நல்ல பெண்ணாக விளங்கினாள்.

**தனக்கிருந்த தையல் கலையினால் நற்கிரியைகளையும், தருமங்களையும் கொஞ்சமாக அல்ல மிகுதியாகச் செய்தாள். அவளுடைய மரணத்திலும் கர்த்தரின் வல்லமை வெளிப்பட்டு அநேகர் விசுவாசிக்க ஒரு வாய்ப்பு ஏற்பட்டது.** மரித்தாள் ஆனால் அவளுடைய நற்கிரியை தொடர வேண்டும் என்பதற்காய் தேவனால் அற்புதம் நிகழ்ந்தது. உயிருள்ளவளாக அழுதவர்கள் முன் அவளை தேவன் நிறுத்தினார்.

இதை வாசிக்கும் சகோதரியே தேவன் உனக்கு கொடுத்த தாலந்துகளை நீ எதற்காய், எப்படி பயன்படுத்துகின்றாய்? உன்னுடைய செல்வத்தை உன் பெயர் புகழுக்காகவா? அல்லது ஏழைகள், ஆதரவற்றோர், விதவைகள், அநாதைகள், திக்கற்ற பிள்ளைகள், கைவிடப்பட்டோர் ஆகியோருக்கு இயேசுவின் அன்பை வெளிக்காட்டுவதற்காக பயன்படுத்துகின்றாயா?



இயேசுவின் அன்பை உன் வாழ்க்கை மூலம் வெளிப்படுத்த தீர்மானம் எடுப்பாயா? **1தீமோத்தேயு 2:10[b] ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே நற்கிரியைகளினாலும், தங்களை அலங்கரிக்கவேண்டும்.** தேவனை அறியாத பெண்கள் தங்களை அலங்கரிக்க (Beauty Palour) அலங்கரிப்பு நிலையங்களை நாடுகின்றார்கள். ஆனால் நீங்களோ (Beauty Palour) அலங்கரிப்பு நிலையத்தை நாடாமல் தபீத்தாள் போன்று நற்கிரியைகளினால் உங்களை அலங்கரித்து தேவனுடைய அன்பை மாத்திரம் மற்றவர்களுக்கு காண்பியுங்கள்.

**கலாத்தியர் 6:9 நன்மைசெய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம்.**

திருமதி. J.பிலிப்

# குறுக்கெழுத்துப் போட்டி – 59
# சரியான பதில்கள்

**இடமிருந்து வலமாக**

01. பேலேகுவின்
04. ஒபதியா
05. கேனியன்
09. பாக்கியவான்
11. யூதா

**வலமிருந்து இடமாக**

02. அகியா
03. கீதரோன்
08. மனாசே
12. கலயெத்

**மேலிருந்து கீழாக**

01. பேயோர்
02. அல்லோன்பாகூத்
05. கேடு
06. யோபு

**கீழிருந்து மேலாக**

07. கீலேயாத்
08. மத்தனியா
09. பாகால் சேபூப்
10. திம்னாள்



# தேடி வந்த ஜீவ ஒளி




**யோவான் 1:4b அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது.**

**அ**ந்த ஜீவன் மனுஷனுக்கு ஒளியாய் இருந்தது. இவ் வசனத்தை நாம் பொறுமையோடு ஆழமாக சிந்திக்கும் போது நமது அண்டவர் மனிதனிற்கு அவசியமான, மிக முக்கியமான தேவை ஒன்று உள்ளது என்பதனைக் காண்பிக்கின்றார். ஏனெனில், நாம் எப்போதும ஒளியை அல்லது வெளிச்சத்தை எதற்கு/எங்கு பயன்படுத்துவோம் என்றால் இருளான அல்லது இருள் நிறைந்த இடத்திலே.

அப்படி என்றால், "**மனிதன் இருள் நிறைந்த வாழ்விற்குள் அகப்பட்டிருக்கிறான்**" எனும் கேள்வி எழும்புகின்றது. ஆம்! இன்றைய நிலையை நோக்கும் போது மனிதர்கள் பலரும் நடைபிணங்களாய் காணப்படுகின்றனர். தோல்விகள், பிரச்சினைகள், இல்லாமைகள், ஏமாற்றங்கள், துரோகங்கள், வயாதிகள், வறுமைகள், கடன் தொல்லைகள், தொழில நஷ்டங்கள்... இவைகள் அனைத்தும் இணைந்து அவனை எங்கே கொண்டு வந்து

> **"அந்தகாரத்திலும், மரண இருளிலும் உட்காரப்பண்ணியுள்ளது. எனவே இதனால் மனிதன் கோழைத்தனமாக எடுக்கும் இறுதி முடிவு மரணம்!.**

தள்ளியருக்கின்றது என்றால்: **லூக்கா 1:78 அந்த காரத்திலும் மரண இருளிலும் உட்கார்ந்திருக்கிறவர்களுக்கு வெளிச்சம் தரவும்,** அந்தகாரத்திலும், மரண இருளிலும் உட்காரப் பண்ணியுள்ளது. எனவே இதனால் மனிதன் கோழைத்தனமாக எடுக்கும் இறுதி முடிவு மரணம்!.

இச் செய்தியை வாசிக்கும் அன்பு மகனே, மகளே! நீயும் சில வேளை இப்படிப்பட்ட அனுபவத்தோடு கூட உன் நாட்களை கண்ணீரின் நாட்களாய கடத்தி இருக்கலாம் அன்பு உள்ளமே உன்னை நேசிக்க, உன் கண்ணீரைத் துடைக்க, உன் கவலைகளை போக்குவதற்கு உனக்கு அன்பு அப்பா ஒருவர் உண்டு. **லூக்கா 1:79 நம்முடைய கால்களைச் சமாதானத்தின் வழியிலே நடத்தவும், அவ்விரக்கத்தினாலே உன்ன தத்திலிருந்து தோன்றிய அருணோதயம் நம்மைச் சந்தித்திருக்கிறது என்றான். அவர்தான் மெய்யான ஒளி. அந்த ஒளி தான் இயேசு கிறிஸ்து.** அவர் உன் கால்களை சமாதானத்தின், சந்தோஷத்தின் வழியில் நடத்தவும், அவருடைய இரக்கம் உன்னை நோக்கி வருகிறது. அவர் வேறு யாரும் இல்லை, **அவர் தான் இயேசு கிறிஸ்து. அவர் உன்னை நேசிக்கின்றார்.** உனக்காக தன்னைத் தான் அடிக்கப்படும் படியாக, நொறுக்கப்படும்படியாய ஒப்புக்கொடுத்தார். அவருடைய கடைசித்துளி வரையும் வடிந்த இரத்தம் எனக்காக, உனக்காக.

> “ ”
> **அன்பு உள்ளமே உன்னை நேசிக்க, உன் கண்ணீரைத் துடைக்க, உன் கவலைகளை போக்குவதற்கு உனக்கு அன்பு அப்பா ஒருவர் உண்டு. அவர்தான் மெய்யான ஒளி. அந்த ஒளி தான் இயேசுகிறிஸ்து.**

இதிலிருந்து விடுதலை அடைய நீ செய்ய வேண்டியது, இயேசுவே என் பாவங்களையும், அக்கிரமங்களையும் உம் சிலுவையின் கீழ் வைக்கின்றேன் என கூறு. அப்போது அங்கிருந்து புறப்படும் மன்னிப்பும் விடுதலையும் உனக்கு ஆசீர்வாதத்தையும், தெய்வீக சுகத்தையும், சமாதானத்தையும் கொடுக்கும்.

**தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.**

உங்கள் அன்பின்
**J.கிறேசியன்.**




## கிறிஸ்துவும் திருச்சபையும்

நாம் இப்போது வேதத்தில் காணப்படும் பிரதான பொருள் ஒன்றினைக் குறித்து கற்றுக் கொள்ளப் போகின்றோம்.

**அது தான் கிறிஸ்துவும் திருச்சபையும்.**

திருச்சபை என்றால் என்ன என்பதனை அறிந்து கொள்ள அந்தப் பதத்தின் அர்த்தத்தை அறிந்து கொள்ள வேண்டும்.

## சபை என்ற பதத்தின் அர்த்தம்:

புதிய ஏற்பாட்டில் இப் பதம் இயேசுவால் பயன்படுத் தப்பட்டதை **மத்தேயு 16:18**இல் காணலாம். **மேலும், நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை. புதிய ஏற்பாடு கிரேக்க மொழியில் எழுதப்பட்டது.** சபையைக் குறித்த கிரேக்க பதம் *Ecclesia* அதன் அர்த்தம்; அழைக்கப்பட்டவர்கள் அல்லது பிரித்தெடுக்கப்பட்டவர்கள்.

**கிரேக்கர்கள் இப் பதத்தை மனிதர்களை அழைத்து மன்றம் ஒன்றை உருவாக்கும் போது பயன்படுத்தினார்கள்.** இந்த மன்றம் மக்களது பொது நலத்தைக் கவனிக்கும். **இந்த மனிதர்கள் வீடுகளில் இருந்தும், வியாபார ஸ்தலங்களில் இருந்தும் அழைக்கப்பட்டு இப்படிப்பட்ட மன்றத்தை அமைக்கும்படி கேட்கப்பட்டார்கள்.** பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழி பெயர்ப்பில் கூட இதே *Ecclesia* என்ற வார்த்தையையே பயன் படுத்தப்படுகிறது. இதைத் தான் ஆதிக் கிறிஸ்தவர்கள் வேதாகமம் என அறிந்து இருந்தனர்.

**மொழி பெயர்க்கப்பட்ட எபிரேய பதம்:** *Quahal* அல்லது *Edhah* இப்பதம் இஸ்ரவேல் சபை அனைத்தையும் **தேவனால் தெரிந்து**

**கொள்ளப்பட்ட சபை என்பதையே குறிக்கின்றது.** இப் பதங்கள்: ஒன்றாக அழைப்பதையும் குறிக்கிறது. எபிரேய கிரேக்க பதங்கள் ஒன்றையே **குறிக்கின்றது** *(an elected number of men call out for a Definite Purpose)*. ஓர் திட்டமான நோக்கத்திற்காக ஒரு குறிப்பிட்ட தொகை மக்கள் தெரிந்து கொள்ளப்படுதல் ஆகும். நாம் இப்போது **உண்மையான திருச்சபையின் உள்ளான சுபாவம் என்ன என்பதைப் பார்ப்போம்.**

## சபையைக்கட்டுபவர்

இந்தக் கல்லின் மேல் என் சபையைக்கட்டுவேன். கிறிஸ்துவே **சபையைக் கட்டுபவர்.** எனவே சபை என்பதும் ஒரு தெய்வீக சிருஷ்டிப்பு ஆகும். **இதன் ஆரம்ப உற்பத்தி தேவனுடைய இருதயத்தில் இருந்தே ஆரம்பித்தது.** இயேசுவே சபையை ஸ்தாபிக்கின்றார். சபையானது கிறிஸ்துவின் சொத்து. இயேசு "என் சபை" என்றே கூறினார்.

**இயேசு புருஷர்களையும் ஸ்திரிகளையும் பாவ வாழ்க்கையிலும், உலக சிநேக வாழ்க்கையிலும் இருந்து பிரித்து எடுத்து, தன் சொந்த நோக்கத்திற்காகப் பிரித்து வைத்திருக்கின்றார்.** இன்றும் அவர் தன் வார்த்தையினாலும் தன் ஆவியினாலும் தன் சபையைக் கட்ட மக்களை அழைக்கின்றார்.

**சபை அதன் ஆரம்பத்தில் இருந்து** தெய்வீகமானதே. அது ஒரு தெய்வீகச் செயல். **"நான் என் சபையைக் கட்டுவேன்"** இயேசு இதை தன் வாழ்க்கையின் மூலமும் போதனையின் மூலமும், சிலுவையில் மீட்பின் வேலையின் மூலமும் செய்தார். **தேவ சபையானது மனந்திரும்பி விசுவாசத்தின் மூலம் இரட்சிப்பின் கிருபையைப் பெற்றவர்களை உள்ளடக்கி இருக்கிறது.**

**இவர்கள் 01. தேவனோடு நெருங்கிய ஐக்கியம் உள்ளவர்களாய் வாழவும், 02. ஒருவரோடொருவர்** ஐக்கியம் உள்ளவர்களாய் வாழவும், **03. தேவனை தேவ சித்தத்தின்படியும் ஆவிக்குரிய ஒருமைப்பாட்டிலும் சேவிக்க,** இயேசுவின் இரத்தத்தினால் மீட்கப்பட்டவர்கள். **மீட்பானது தேவனுடைய (ஒரே பேறான) குமாரனாகிய இயேசுவின் மூலம் நிகழ்ந்த தேவ செயலாகும்.**

**அப்போஸ்தலர் 20:28 ஆகையால், உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்தஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்.** இதற்கு காரணம் உண்டு: **அப்போஸ்தலர் 20:29-30 (29.) நான் போனபின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும். 30. உங்களிலும்**

சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன். எம் மீட்புக்கும், சபையைச் சம்பாதிப்பதற்கும் இதிலும் பார்க்க மேலான கிரயத்தை யாரும் செலுத்தியிருக்க முடியாது. *அப்போஸ்தலனாகிய பேதுரு இதைக் குறித்து கூறுவதைப் பாருங்கள்:* 1பேதுரு 1:18-19 (18.) உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அநுசரித்துவந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னி னாலும் மீட்கப்படாமல், 19. குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே.

*திரும்பவும் அப்போஸ்தலனாகிய பவுல்:* எபேசியர் 5:25-27 (25.) புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து, 26. தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும், 27. கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார். *கிறிஸ்து இன்றும் சபையைக் கட்டிக் கொண்டு இருக்கின்றார்.* தன் வார்த்தையின் மூலமும் *தன் ஆவியின் மூலமும்* அவரது உடன் வேலையாட்கள் மூலமும் இவர்கள் மீட்படைந்து இந் நோக்கத்திற்காக அழைக்கப்பட்டவர்கள். 1கொரிந்தியர் 3:9.

## கட்டடம்

*இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன் - மத்தேயு 16:18.* இயேசு தன் கிரியையை மனிதர்கள் மீது காட்டுவதில்லை. *ஆனால் மனிதர்களை அவர் பாவிக்கின்றார்.* மனிதர்கள் அவருடைய உடன் வேலையாட்களாய் இருக்கும்படி அழைக்கப்பட்டவர்கள். *கல்லு பேதுரு அல்ல; கிறிஸ்துவே அக்கல்லு.* நாம் வேதத்தின் சரியான வியாக்கியா னத்தைப் பெற வசனத்தின் பொருளையும் சமாந்தர அல்லது ஒத்த வசனங்க ளையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

*சபையின் அஸ்திபாரத்தைக் குறித்து புதிய ஏற்பாடு என்ன கூறுகின்றது: 1கொரிந்தியர் 3:10-11 இப் பகுதியில் கிறிஸ்துவே அஸ்திபாரம் என மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.* எபேசியர் 2:19-22, 1பேதுரு 2:4-5. *இவ் வேதப்பகுதியில் இருந்து கிறிஸ்துவே "நிலைத்திருக்கிற தேவனுடைய உறுதியான அஸ்திபாரம்"* எனத் *தெரிகிறது.*

*(கர்த்தருடைய மகிமையில் பிரவேசித்த போதகர் எம்.எம்.இன்பருபன்)*

தொடரும்...

# குறுக்கெழுத்துப்போட்டி - 60

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ☒ | 01 | | | | ☒ | | | 02 |
| | | ☒ | ☒ | | | | | 03 |
| | | ☒ | ☒ | ☒ | 04 | | | |
| | ☒ | | | | | 05 | ☒ | |
| | 06 | | ☒ | ☒ | ☒ | ☒ | | |
| | | | ☒ | ☒ | | | 07 | |
| | | 08 | | | ☒ | ☒ | 09 | |
| | ☒ | | | | | | | 10 |
| 11 | | | | | ☒ | ☒ | ☒ | |

குறிப்பு:- 12வயதுக்கு
மேற்பட்டவர்களை தயவு செய்து
குறுக்கெழுத்துப் போட்டியை செய்து
அனுப்பும்படி கேட்டுக்கொள்கின்றோம்.
- நன்றி -

## இடமிருந்து வலமாக

01. இவனின் கடிகாரத்தில் முன் போன சாயை பத்துப்பாகை பின்னிட்டுத் திரும்பியது
04. ஏலோனின் குமாரன்
08. இவன் ஒரு முழ நீளமான ஒரு கத்தியை உண்டுபண்ணினான்
11. மீன்வாசலை இவனின் குமாரர் கட்டினர்

## வலமிருந்து இடமாக

02. ஒரு நரி ஏறிப்போனால் அவர்களுடைய கல்மதில் இடிந்து போகும் என்றவன்
03. இது பட்டயத்தினால் உண்டாகும் ஆக்கினையை வரப்பண்ணும்
05. பெலிஸ்தர் குற்ற நிவாரணத்திற்காக கர்த்தருக்கு செலுத்தின பொன் சொரூபங்களில் ஒன்று
07. இந்தப் பட்டணத்தின் பிரபுக்கள் மூடர்கள்
10. கர்த்தருக்குப் பயப்படுகிறவனுக்கு இது உண்டு

## மேலிருந்து கீழாக

01. உம்முடைய ஜனங்களை உமது புயத்தினால் மீட்டுக்கொண்டீர் எனச் சொன்னவன்
03. இவர்களிடத்தில் ஆலோசனையும் இராமல் ஒழிந்து போகும்
06. இந்த மனுஷன் அவமதிக்கப்பட்ட உடைந்த சிலை

## கீழிருந்து மேலாக

08. கர்த்தர் இவனின் சுதந்தரத்தை வனாந்தரத்திலுள்ள வலுசர்ப்பங்களின் தாபரமாக்கினார்
09. இருநூறு பேர் இந்த ஆற்றைக் கடக்கமாட்டாமல் நின்று போனார்கள்
11. பாழாக்குகின்ற அருவருப்பு



# மன்னிப்பும் சந்தோஷமும்

## வேதப்பகுதி: ரோமர் 12:16–21

இதர்சன் நண்பர்களோடு கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்தான். திடீரென சண்டை வந்துவிட்டது. **விக்கியும் நண்பர்களும் சேர்ந்து இதர்சனை அடித்துவிட்டனர்.** மறுநாள் இதர்சனும் நண்பர்களும் கிரிக்கெட் விளையாடப் போய்க் கொண்டிருந்தனர். விக்கி எதிர்பாராத விதமாக அந்த பக்கம் வந்தான். இதர்சனின் நண்பர்கள் "நேற்று அவன் உன்னை அடித்தான், இன்று நாம் விக்கியை அடிக்கலாம்" என்றனர். ஆனால் இதர்சன் யோசேப்பைப் போல மன்னிக்க விரும்பினான்.



"விக்கி வா நாம் இன்று ஜாலியாக கிரிக்கெட் விளையாடுவோம்" என்றான் இதர்சன். தன்னை அடிக்கப் போகின்றார்கள் என்று பயந்து கொண்டிருந்த விக்கிக்கு ரொம்ப சந்தோஷம். அன்று மிகவும் சந்தோஷத்தோடு எல்லாரும் கிரிக்கெட் விளையாடினார்கள்.

**ஆம் மன்னிக்கும் மனநிலை நமக்கிருந்தால் அங்கே நிச்சயம் சந்தோஷம் உண்டு. பழிவாங்கும் இடத்தில் வேதனைகள் தான் வரும். எனவே தான் எல்லாரிடமும் சமாதானமாயிருங்கள் என்று வேதம் சொல்கின்றது.**

**சிந்தனைக்கு:- பிறரை மன்னிக்கும் போது சந்தோஷம் எல்லாருக்கும் உண்டு; பிறரை பழி வாங்கும் போது யாருக்கும் நன்மை இல்லை.**

---

நன்றி: "சின்னஞ்சிறு இதயங்களே கேளுங்கள்! – ஜீன் 16




# வில்லியம் வில்பர்போர்ஸ்

## 1759 – 1833

## திட்டத்தை எண்ணிப்பார்



உலகில் பிறந்த மனிதர்கள் ஒவ்வொருவருக்கும், ஆண்டவர் ஒரு திட்டத்தை வைத்திருக்கிறார். அத்திட்டத்தை நாம் நிறைவேற்றினால் மட்டுமே இறைவனிடம் செல்ல முடியும். இத்திட்டங்களை நாம் அறிந்து கொள்வது எப்படி? வேத வாசிப்பும், ஜெபமும் தேவ சித்தத்தை நம்மில் வெளிப்படச் செய்கின்றன.

வில்லியம் வில்பர் போர்ஸைக் கொண்டு ஆண்டவர் மிகப் பெரிய மகத்தான பணிகளைச் செய்தார். இங்கிலாந்து நாட்டில் அடிமை வியாபாரமும், அடக்கு முறைகளும் மலிந்திருந்த காலம் அது. இங்கிலாந்தின் பொருளாதாரமே இவ்வடிமைகளின் வேலையைச் சார்ந்தே அமைந்திருந்தது. சமத்துவம் என்பதே அங்கு கற்பனையிலும் நினைத்துப் பார்க்க முடியாததாகக் காணப்பட்டது. ஏனெனில், அடிமைகளை அவர்கள் மனிதர்களாக பாவிக்கவில்லை. விலங்கினும் கொடியவர்களாகக் கருதினர்.

1874இல் மறுபிறப்பு அடைந்த வில்லியம் வில்பர்போர்ஸ் அரசியலில் ஈடுபட்டார். இளம் வயதிலேயே பாராளுமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். அரசியலில் காணப்பட்ட ஒழுக்கமற்ற செயல்கள் மன வெறுப்பைத் தந்தன. எனினும், கடவுள் தனக்குத் தந்த இரண்டு பெரிய திட்டங்களை எண்ணிப்பார்த்தார். அடிமைத்தனத்தை ஒழிக்க வேண்டும், ஒழுக்கத்தில் மறுமலர்ச்சியைக் கொண்டு வரவேண்டும் என்பவைகளே அவை.

வேதாகம ஆதாரத்துடன், தன்னுடைய சீர்திருத்த பணியை திறம்பட ஆரம்பித்தார். பல சோதனைகளும், இடையூறுகளும் இவரின் பணியைச் செய்ய விடாமல் தடுத்தன. ஆயினும், ஒத்த மனதுடையவர்களின் கூட்டு முயற்சியால் மாபெரும் சீர்திருத்தத்தை இங்கிலாந்தில் ஏற்படச் செய்தார்.

**ஆண்டவர் வரலாற்றில் செயலாற்றுகிறார் என்பதைத் திட்டமும், தெளிவுமாக நிலைநிறுத்திக் காட்டினார். இங்கிலாந்தில் புரட்சி ஏற்பட்டது. அடிமைத்தனத்துக்கு எதிரான சட்டம் பிறப்பிக்கப்பட்டது.** மக்கள் சமமாகவும், சுபிட்சமாகவும் வாழ்வதற்கு வில்பர் போர்ஸ் காரணமானார்.

**அன்பரே! நம்மைச் சுற்றி வாழும் மக்களுடன் சமத்துவமாகப் பழகுகின்றோமா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: "அன்பே நமது ஊழியத்தின் அஸ்திபாரமாக இருக்குமானால் நாம் ஜீவிப்பதில் பிரயோஜனம் உண்டு. மற்றப்படி அது பூமிக்கும் மற்றவர்களுக்கும் பாரமாகத்தான் இருக்கும்"**

*நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" ஆகஸ்ட் 24*

---

## ஜான் ஹார்ப்பர்

### 1872 – 1912

### கடைசி நிமிடம்



டைட்டானிக் கப்பல் நினைவிருக்கிறதா? இங்கிலாந்து நாட்டில் தயாரிக்கப்பட்ட மிகப் பெரிய கப்பல். "மூழ்கடிக்க முடியாத கப்பல்" என்று அதை உருவாக்கியவர்களே பெருமையுடன் அறிவித்தார்கள்.

அதன் முதற்பயணம், வட அட்லாண்டிக் கடலில் கப்பல் சென்று கொண்டிருந்தது. வேகமாகச் சென்ற கப்பல் மறைவாயிருந்த பனிப்பாறையில் மோதியது. அபாயக் குரல் பறந்தது. ஒரு சிலரை மட்டுமே மீட்க முடிந்தது. 2223 பேர் தண்ணீரில் மூழ்கி மரணத்தைச் சந்தித்தனர்.

அக் கப்பலில் பயணம் செய்தவர்களுள் ஒருவர் தான் ஜான் ஹார்ப்பர். இங்கிலாந்து நாட்டைச் சார்ந்த சுவிசேஷகர், கப்பல் உடைந்த வேளையில் தன் கையில் கிடைத்த மரப்பலகையைப் பிடித்தபடி

தத்தளித்துக் கொண்டிருந்தார். அருகிலே ஒரு வாலிபன் உயிருக்குப் போராடிக்கொண்டிருந்தான்.

"நண்பனே நீ இரட்சிக்கப்பட்டிருக்கிறாயா?" என்று ஜான் ஹார்ப்பர் கேட்டார். இல்லை என்றான் அவன். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி. அப்பொழுது இரட்சிக்கப்படுவாய், அவர்கள் பேசிக்கொண்டிருக்கும் போதே அலை ஒன்று அவர்களைப் பிரித்தது.

சற்று நேரத்தில் மீண்டும் இணைந்தனர். "உன் இருதயத்தில் சமாதானம் வந்து விட்டதா? இரட்சிப்பின் நிச்சயத்தைப் பெற்றுக் கொள்..." வார்த்தைகள் முடியுமுன்னே அவர் உடல் தண்ணீருக்குள் சென்றது.

**ஆண்டுகள் கடந்தன. கனடா நாட்டில் நடந்த எழுப்புதல் கூட்டத்தில் அவ் வாலிபன், ஜான் ஹார்ப்பர் இயேசுவுக்குள் வழி நடத்திய கடைசி ஆத்துமா நான் தான் என்று அக்கடைசி நிகழ்ச்சியை உருக்கமாக கூறினான்.** ஹார்ப்பர் தனது 17 வயதில் தொடங்கிய நற்செய்தி ஊழியம், அவரது வாழ்வின் கடைசி மூச்சு வரைக்கும் தொடர்ந்தது. பலர் வாழ்வை மாற்றியது.

**அன்பரே! நீங்கள் பெற்ற இரட்சிப்பை எந் நிலையிலும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்கின்றீர்களா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: உன்னை உற்றுப்பார்த்தால் துன்பங்கள் பெருகும். தேவனை நோக்கிப் பார்த்தால் துன்பங்கள் மறையும்.**

*நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" ஏப்ரல் 14*

---

# வினா விடை – 61

## சரியான விடை எழுதியவர்கள்

01. நா.கிறிஸ்தீனா – காரைநகர்
02. நா.சிவபாக்கியம் – காரைநகர்
03. கோ.இன்பவதனி – காரைநகர்
04. வ.அப்சாள் – பாண்டவெட்டை
05. வ.தயாளினி – பாண்டவெட்டை
06. வ.துவாழினி – பாண்டவெட்டை
07. வ.ஜோஹணன் – பாண்டவெட்டை
08. எஸ்.ரதீஸ்வரி – பாண்டவெட்டை
09. அ.கம்சிகா – காரைநகர்
10. அ.எஸ்தர் – காரைநகர்
11. அ.தெபோறா – காரைநகர்
12. அ.கிருஷாந்தன் – காரைநகர்
13. க.சுபாசினி – கட்டுடை
14. வி.நிதர்சன் – ஊர்காவற்றுறை
15. வி.ஸர்மிளா – ஊர்காவற்றுறை
16. க.றெஜீவன் – ஊர்காவற்றுறை
17. க.விக்னேஸ்வரன் – ஊர்காவற்றுறை
18. செ.நதுஸா – பாண்டவெட்டை
19. செ.எமிமாள் – பாண்டவெட்டை

[redacted]

## விளையாடி – 61 சரியான பதில்கள்

01. ஆசா – 11நாளாகமம் 14:11
02. எசேக்கியேல் 34:31
03. உழைப்பாளியானவன் – யோபு 28:4
04. கவலை – நீதிமொழிகள் 12:25
05. 36
06. யோபு – யோபு 21:4
07. 6853
08. ஆகூர் – நீதிமொழிகள் 30:1-2
09. சூதுள்ள மனுஷனையும், இரத்தப்பிரியனையும்–சங் 5:6
10. தன் புத்திக்குத்தக்கதாக – நீதிமொழிகள் 12:8

## குறுக்கெழுத்துப் போட்டி – 59 சரியான பதில் எழுதியவர்கள்

01. அ.கம்சிகா – காரைநகர்
02. நா.கிறிஸ்னா – காரைநகர்
03. நா.சிவாக்கியம் – காரைநகர்
04. கோ.இன்பவதனி – காரைநகர்
05. மே.கிறேறா – நாவற்குழி
06. இ.சுவேந்தன் – மீசாலை
07. இ.சுரேகா – மீசாலை
08. வ.அப்சாள் – பாண்டவெட்டை
09. வ.தயாழினி – பாண்டவெட்டை
10. வ.குஷாழினி – பாண்டவெட்டை
11. வ.ஜோஹனன் – பாண்டவெட்டை
12. எஸ்.ரதீஸ்வரி – பாண்டவெட்டை
13. அ.எஸ்தர் – காரைநகர்
14. அ.தெபோரா – காரைநகர்
15. அ.கிருஷாந்தன் – காரைநகர்
16. க.சுபாசினி – கட்டுடை
17. செ.நதுலா – பாண்டவெட்டை
18. செ.எமிமாள் – பாண்டவெட்டை

# அனலின் ஆன்மீக விருந்து!

## போட்டிகள் போராட்டங்கள் துன்பங்கள் உபத்திரவங்கள் நிறைந்த உலகில்

## நீ கிறிஸ்தவன் என்பதை நிரூபித்துக்காட்டு

**கி**றிஸ்தவத்தில் விசேஷமாக அழைக்கப்பட்ட ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் உபத்திரவங்கள், துன்பங்கள், பாடுகள் வருகின்ற போது நீ கிறிஸ்தவன் என்பதை காண்பி.

* அடுத்தடுத்து துன்பம் வருகின்ற போது தான் நாம் யார் என்பதை நிரூபிக்கின்றோம்.

** உபத்திரவங்கள், துன்பங்கள் வருகின்ற போது ஒரு உண்மையான சாட்சி எது என்பது இறுதியில் நிரூபிக்கப்படும்.

*** உபத்திரவங்கள் தான் நாம் புடமிடப்படும் குகை.

எங்களுடைய அழைப்பின் காலம் தொடங்கி நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்தவர்கள் என்பதை நிரூபித்துக் காட்ட வேண்டிய சந்தர்ப்பங்கள் அதிகம் உண்டு. ஆகவே இந்த நாட்களில் நாங்கள் கிறிஸ்தவர்கள் என்பது நிரூபித்துக் காட்டப்பட வேண்டியதொன்று.

*இதற்காக என்னைக் குறித்து ஒரு சிறிய உதாரணத்தை கூறுகின்றேன். இது என்னைக் குறித்து பெருமைப்பட வேண்டிய காரியமல்ல, மாறாக வெட்கப்பட வேண்டிய ஒரு காரியமே. என்னவென்றால், மீசாலை என்னும் இடத்தில் அமைந்துள்ள எமது கிளைச்சபைக்கு ஒரு ஞாயிற்றுக்கிழமை செல்லுமாறு தலைமைப் போதகர் என்னை பணித்தார். அவ்வாறே நானும் அங்கே*

*சென்று ஆராதனை முடித்து வரும் போது மோட்டார் சைக்கிளின் பக்க கண்ணாடியால் பார்க்கும் போது இருவர் மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் வேகமாக வந்து கொண்டிருந்தபடியால் நானும் வேகமாக வந்தேன். பிற்பாடு நான் கண்ணாடியில் பார்த்தேன், அவர்கள் தூரத்தில் வந்து கொண்டிருந்தார்கள், எனவே நானும் வேகத்தை குறைத்து மெதுவாக வந்தேன். பிற்பாடு பார்த்தால் அவர்கள் வேகமாகய் வர நானும் அவர்களை விடாமல் வேகமாய் மோட்டார் சைக்கிளை செலுத்தினேன். திடீரென்று பார்த்தால் மோட்டார் வாகனத்தில் வந்தவர்கள் தங்களுடைய வாகனத்தை ஒரு ஓரமாக நிறுத்தினார்கள். அப்பொழுது நான் மெதுவாக ஓட ஆரம்பித்தேன். அதற்கு பின் அவர்கள் முதல் ஓடிய வேகத்தைப் பார்க்கிலும் மிகவும் அதிகமான வேகமாக வந்தார்கள். இதைப் பார்த்த நான் இன்னும் வேகமாக ஓடினேன். ஒரு கட்டத்தில் அவர்களை என்னால் காணமுடியாமல் போய்விட்டது. அதற்கு பிற்பாடு தான் நான் எனது வேதாகமத்தை பார்த்தேன், அதை காணவில்லை. அப்பொழுது தான் எனக்கு புரிந்தது: அவர்கள் என்னை பின் தொடர்ந்து வந்தது, என்னை முந்துவதற்காக அல்ல, எனக்கு உதவி செய்வதற்காகவே!. நான் விழுத்திய வேதாகமத்தை என்னிடம் தருவதற்காகவே அவர்கள் வேகமாக வந்திருக்கிறார்கள். ஆனால் எனக்கு அது புரியவில்லை. இந்தக் காரியம் அதிகமாக என்னை பாதித்து.*

இது ஒரு சாதாரண காரியம் தான். ஆனால் அந்த இடத்தில் நான் ஒரு கிறிஸ்தவன் என்பதை எனக்கு நான் நிரூபிக்க தவறி விட்டேன். நான் கிறிஸ்தவன் என்பதை நிரூபிக்கத்தவறியதால் இழப்பு அவர்களுக்கல்ல; மாறாக அது எனக்குத்தான் ஏற்பட்டது. **கிறிஸ்தவன் என்பதை நிரூபிக்கத் தவறும பட்சத்தில் ஆசீர்வாதங்களை இழக்கின்றோம்.** ஆகவே இதிலிருந்து ஒரு சத்தியத்தைக் கண்டு கொண்டேன், நிரூபிக்கத் தவறும் பட்சத்தில் அதிகமான ஆசீர்வாதங்களை இழக்கின்றோம். எனவே போட்டிகளும், போராட்டங்களும், வேதனைகளும் நிறைந்த இந்த உலகில் கிறிஸ்தவன் என்பதை நிரூபிக்க வேண்டும். நான் செய்த இந்தக் காரியம் யாருக்கும் தெரியாது. ஆனால் கிறிஸ்தவன் என்று நிரூபிக்கத்தவறிய இந்த செயலைக் குறித்து நானே நொந்து கொண்டேன். என்னுடைய தவறினால் மற்றவர்களுக்கு அல்ல; எனக்குத் தான் இழப்பு. நான் தவறினால் எனக்கு இழப்பு, நீங்கள் தவறினால் உங்களுக்கு இழப்பு. எனவே நாம் கிறிஸ்தவர்கள் என்பதை நிரூபிக்க வேண்டும்.

வேதாகமத்தில் எத்தனையோ மக்கள் சோர்வின் நேரங்கள், வேதனையின் நேரங்களைக் கண்டு பின்வாங்கி விட்டார்கள். ஆனால் இன்னும் சிலர் சோர்வின், துன்பங்களின் நேரங்களைக் கண்டும் தங்கள் விசுவாசத்தை உறுதிப்படுத்தினார்கள். இன்னும் சிலர் அப்படிப்பட்ட வேளையில் தாங்கள் உண்மையுள்ள தேவனுடைய பிள்ளைகள் என்பதை நிரூபித்துக் காட்டினார்கள். எனவே நாங்களும் நிரூபித்துக்காட்ட வேண்டும். இன்றைய நாட்களில் துன்பங்கள், வேதனைகளைக் கண்டு நாங்கள் கிறிஸ்தவர்கள் இல்லை என்பதைக் காட்டுவது தான் பெருகியிருக்கின்றது. அனேக வேதனையான நேரங்களில் ஆண்டவருடைய உள்ளத்தை புரியாதவர்களாய் இருக்கின்றோம். சாட்சியை நிரூபித்துக் காட்டிய ஒரு சம்பவத்தை சங்கீதங்களின் புத்தகத்திலிருந்து ஆதாரத்தோடு பார்க்கலாம்.

**சங்கீதம் 44:1-8** வரைக்குமான வசனங்கள் அவரின் அதிசயமான வழிநடத்தல்களைக் காண்பிப்பதும் தேவனைப்புகழ்ந்து பாடுவதும்

**சங்கீதம் 44:9-16** வரையான வசனங்களில் அவர்களுக்கு வந்த துன்பங்களும் கூறப்படுகின்றது.

**சங்கீதம் 44:17,19** வசனங்களில் இவைகள் அனைத்தும் வந்தாலும் ஆண்டவரை விட்டுப் பிரியாத நல்ல ஒரு இருதயம் காண்பிக்கப்படுகின்றது.

**சங்கீதம் 44:18,20** வசனங்களில் அவர்கள் தேவனுடைய நாமத்தை மறக்கவில்லை என்பதுவும் சொல்லப்படுகின்றது.

இந்த வசனங்களிலே மக்களுக்கு ஏற்பட்ட சொல்ல முடியாத துயரம், அவர்கள் அனுபவித்த வேதனைகள் காணப்படுகின்றது. நாங்கள் அழைக்கப்பட்டதே துன்பப்படுவதற்காக என்று அப்போஸ்தலனாகிய பேதுரு கூறுகின்றார். இயேசு கூறினார்: மனுஷகுமாரனுக்கு தலைசாய்க்க இடமில்லை. அப்படியானால் எவ்வளவாய் வேதனைப் பட்டார், எங்களுடைய தேவன் அவர் எமது மூத்த சகோதரனைப் போன்று இருக்கின்றார். அவர் எமக்கு முன்பதாக தேவனுடைய சித்தத்தை செய்து காட்டியிருக்கின்றார்.

அவர்பிறப்பதற்கே இடமில்லாமல், பிறந்தது தொடக்கம் சிலுவைக்கு சென்று என்னுடைய ஆவியை உம்முடைய கரங்களில் ஒப்புவிக்கிறேன் என்று சொல்லுமவரைக்கும் அவர் வேதனைப்பட்டார். ஆகவே ஆண்டவருடைய பிள்ளைகள் என்று சொல்லும் போது அவருடைய வாழ்க்கையில் பெரும்பாலும் வேதனைகளும், துன்பங்களும் தான். இதற்காகவே நாம் அழைக்கப்பட்டும் இருக்கின்றோம். நாம் எவ்வளவு அழகாக உடுத்தி, எவ்வளவு அதிகமாக சிரித்தாலும் கிறிஸ்தவத்தின் பெரும்பகுதி துன்பம் தான். அதனைக்கடந்தோமாக இருந்தால் வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை தான்.

**சங்கீதம் 44:1-8** வரையான வசனங்கள் வரைக்கும் தேவனைப் புகழ்ந்து தேவனைத் துதிப்போம் என்று சாட்சியிட்டு காண்பிக்கப்படுகிறது.

இதன்பிற்பாடு; தங்களுக்கு ஏற்பட்ட நெருக்கங்கள், ஆபத்துகள், துன்பங்களைக் கூறுகிறான்.

**சங்கீதம் 44:9 நீர் எங்களைத் தள்ளிவிட்டு, நாணப்பண்ணுகிறீர்; எங்கள சேனைகளுடனே செல்லாதிருக்கிறீர்.** வசனத்தில் சங்கீதக்காரன் தங்களுக்கு நேர்ந்த துன்பத்தைக் கூறுகின்றார்.

இப்படியென்றால் தேவனை அவர்களைக் கைவிட்ட ஒரு அனுபவம். அழைக்கப்பட்டவர்கள், தெரிந்து கொள்ளப்பட்டவர்கள், இவர்கள் எகிப்தின் அடிமைத்தனத்தில் இருந்து மீட்கப்பட்டவர்கள் தான். ஆனால் இவ் வசனத்தில் தேவன் அவர்களோடு செல்லவில்லை என்ற வேதனையான அனுபவம், உணர்வு அவர்களுக்கு ஏற்படுகின்றது.

**சங்கீதம் 44:10 சத்துருவுக்கு நாங்கள் இடைந்து பின்னிட்டுத் திரும்பிப்போகப் பண்ணுகிறீர்; எங்கள் பகைஞர் தங்களுக்கென்று எங்களைக் கொள்ளையிடுகிறார்கள்.** இஸ்ரவேல் ஜனங்கள் எதிர்கொள்கின்ற மிக வேதனையான சூழ்நிலை, வேதனையான தாக்கம், அவர்களை பாதிக்கின்ற ஒரு செயல். எங்களுடைய சேனையெல்லாம் பின்னிட்டு ஓடுகின்றது. நாங்கள் தோற்றுப்

போகின்றோம், எங்களிடத்தில் நன்மை இல்லை, எங்களுடைய ஆசீர்வாதத்தை பிடிக்க முடியாமல் போய்விட்டதே என்றார்கள். **சங்கீதம் 44:11 நீர் எங்களை ஆடுகளைப்போல இரையாக ஒப்புக்கொடுத்து, ஜாதிகளுக்குள்ளே எங்களைச் சிதறடிக்கிறீர்.** ஆடுகளைப் போல் இரையாக ஒப்புக்கொடுத்தல் என்றால் இது அவர்களுடைய உயிரோடு போராடுகின்ற ஒரு ஜீவ-மரணப் போராட்டம். ஏதாவது ஒரு கொடிய மிருகம் ஒரு ஆட்டை தாக்கும் போது அதன் தொண்டையைப் பிடிக்கும். இப்படிப்பட்ட துன்பம் எங்களுக்கு எப்போதாவது வந்திருக்கின்றதா? இஸ்ரவேல் ஜனங்கள் கூறுகின்றார்கள்; நாங்கள் உயிருக் காக போராடுகின்றோம். தப்புவோம் என்று நினைக்கவில்லை என்று சங்கீதக்காரன் மிகவும் வேதனையுடன் கூறுகின்றான்.

**சங்கீதம் 44:12-13 (12.) நீர் உம்முடைய ஜனங்களை இலவசமாக விற்கிறீர்; அவர்கள் கிரயத்தினால் உமக்கு லாபமில்லையே. 13. எங்கள் அயலாருக்கு எங்களை நிந்தையாகவும், எங்கள் சுற்றுப்புறத்தாருக்குப் பரியாசமும் சக்கந்தமுமாகவும் வைக்கிறீர்.** தேவனுக்கென்று உண்மையாய் இருக்கின்ற உங்களுடைய வாழ்க்கையிலே இப்படியான நிலை வந்தால்அவை இறுதியில்உங்களுக்கு மகிமையாக முடியும். நாங்கள் ஜாதிகளுக்குள்ளே பழமொழியாயிருக்கின்றோம். ஆண்டவருக்குள் சரியாக இருப்பதினால் அனேக பழ மொழிகள், பட்டப்பெயர்கள் வழங்கப்படும். நீங்கள் வேத வசனத்திற்காக வைராக்கியமாக இருந்தால் மற்றவர்கள் உங்களை கேலி செய்யலாம், இவரைவிட பரிசுத்தவான் வேறு யாரும் இல்லை என்பார்கள். இதைப் போலவே இஸ்ரவேல் ஜனங்களுக்கும் அதிகமான பழமொழிகள், வேண்டாத வார்த்தைகள், தாக்கங்கள் வந்தது. **சங்கீதம் 44:14 நாங்கள் ஜாதிகளுக்குள்ளே பழமொழியாயிருக்கவும், ஜனங்கள் எங்களைக்குறித்துத் தலைதுலுக்கவும் செய்கிறீர்.** இரட்சிக்கப்பட்டவர்கள் ஏதாவது தவறு செய்தால் இரட்சிக்கப்படாதவர்கள் அதைக் குறித்து மிக ஏளனமாக பேசுவார்கள். தேவனுடைய பிள்ளைகளாகிய நீங்கள் தவறுவிடவே கூடாது. மாறாக தவறுவிட்டால் அதிகமான நிந்தனைகள் உங்களுக்கு வரும்.

ஆனாலும் பாவம் செய்யாமல் ஆண்டவருக்காய் சாட்சியாயிருக்கின்ற போது சிலர் தலை துலுக்குவார்கள், ஏளனமாய் பேசுவார்கள். **சங்கீதம் 44:15-16 (15.) நிந்தித்துத் தூஷிக்கிறவனுடைய சத்தத்தினிமித்தமும், சத்துருவினிமித்தமும், பழிவாங்குகிறவனினிமித்தமும், 16. என் இலச்சை நித்தம் எனக்கு முன்பாக இருக்கிறது; என் முகத்தின் வெட்கம் என்னை மூடுகிறது.** நீ தேவன், தேவன் என்று நம்பியிருந்தாயே நடந்த காரியத்தை பார்த்தாயா? உன் தேவன் உன்னைக் கைவிட்டுவிட்டார் என்பார்கள். ஆடுகளை இரையாக ஒப்புக்கொடுத்தது போல ஒப்புக்கொடுத்துவிட்டார் என்ற அயலவர்களுடைய நிந்தையையும், பரியாசத்தையும் நினைக்கின்ற போது வெட்கம் என்னை மூடுகின்றது என்று சங்கீதக்காரன் கூறுகின்றான்.

இவைகளுக்கு மத்தியிலும் சங்கீதக்காரன் கூறுகின்றான்: **சங்கீதம் 44:17 இவையெல்லாம் எங்கள் மேல் வந்திருந்தும், உம்மை நாங்கள் மறக்கவும் இல்லை, உம்முடைய உடன்**

**படிக்கைக்குத் துரோகம்பண்ணவும் இல்லை.** இவை அனைத்தும் வந்தது தான், ஆடுகளைப் போல் ஒப்புக் கொடுக்கப்பட்டோம் தான், அயல வர்கள் பரியாசம்பண்ணி னார்கள் தான், நிந்தனைகள் வந்தது தான், சத்துருவுக்கு பின்னிட்டு ஓடி னோம், இடைந்து விழுந்தோம் ஆனாலும் இவை எல்லாவற்றிலும் நாங்கள் உம்மை மறக்கவுமில்லை, உம்முடைய உடன்படிக்கைக்கு துரோகம் பண்ணவுமிலலை. **இது தான் நிரூபித்துக் காட்டுகின்ற நிலை.**

நாங்கள் யார் என்று நிரூ பித்துக் காட்டுவதற்கு வேதாக மத்திலே சொல்லப்பட்ட காரியம் நடந்துதான் ஆக வேண்டும். அப் பொழுது தான் எங்களுடைய கிறிஸ்தவ வாழ்க்கையை நிரூபித் துக் காட்ட முடியும். அவர்கள் எப்படி பின்வாங்கவில்லை. **01. தேவனை மறக்கவில்லை, 02. அவரு டைய உடன்படிக்கைக்கு துரோகம் பண்ணவில்லை.** இந்த இரண்டு காரியங்களும் எங்களுடைய சிந்தனையோடும் செயலோடும் சம்பந்தப்பட்டிருக்கின்றது. சிலர், நான் தேவன் தேவனென்று சென் றேன், ஆனால் என்னத்தை கண்டு கொண்டேன் என்று தங்கள் வாயி னால் கூறாவிட்டாலும் இருதயத் தில் நினைப்பார்கள். ஆனால் இந்த சங்கீதத்தைப் பாடியவர் கூறுகின்றார்: நான் என் இருயத் தில் கூட அப்படி நினைக்கவில்லை என்கிறார். இயேசு சொன்னார்: இருதயத்தில்நினைத்தாலே செயலிலே செய்து முடித்தாயிற்று என்பதாக. மேலும் சங்கீதக்காரன் கூறுகின் றார்: உம்முடைய உடன்படிக்கைக்கு நான் துரோகம் பண்ணவில்லை என்கிறார். வெளியரங்கமாக, ஜனங்கள் பார்க்கும்படியாக அவ ரோடு செய்த உடன்படிக்கையை கிழித்துப்போடலாம். ஆனால் இவர் இருதயத்திலும், செயலிலும் உடன்படிக்கையை மீறவில்லை. உடன்படிக்கை என்று சொல்லும் போது **நாம் எல்லோரும் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினாலே ஒரு புதிய உடன்படிக்கையில் இணைந் திருக்கின்றோம்.** எங்கள் யாராலும் செய்ய முடியாத ஒன்றை இயேசு கிறிஸ்து எங்கள் ஒவ்வொருவருக் காகவும் செய்திருக்கிறார்.

உங்களுடைய வாழ்க்கை யில் என்னதான் துன்பம் வரட் டும், நீங்கள் நினைத்தது நடக்கா மல் போகட்டும். ஆனாலும் நீங் கள் அண்டவரோடு செய்த உடன் படிக்கையை ஒருபோதும் உடைத்துப் போடக்கூடாது. வேதம் சொல் கின்றது, எங்களை பரிசுத்தம் பண்ணிய இரத்தத்தை அவமதித்து, காலின் கீழாய் மிதித்து பின்வாங் கிப் போனால் அதை மறுபடியும் புதுப்பிப்பது இயலாத ஒரு காரி யம். **எனவே ஆண்டவரோடு உடன் படிக்கை பண்ணி தேவனுடைய பிள் ளைகளாய் இருக்கின்ற நீங்கள் செய்ய வேண்டியது உடன்படிக் கையை ஒருபோதும் உடைக்கக் கூடாது. அடுத்து திருச்சபையோடு செய்து கொண்ட உடன்படிக்கையை உடைக்கக்கூடாது.** நாங்கள் வளரும் படி தேவன் எங்களை எங்கே வைத்திருக்கின்றாரோ அந்த சபை யின் உடன்படிக்கையை உடைக்கக் கூடாது. உடைத்தால்நாங்கள்நிரூபித்து காட்ட முடியாத கிறிஸ்தவர் களாய் மாறிவிடுவோம்.

*என்னுடைய ஊழிய ஆரம்ப நாட்களில் ஒரு காரியம் என் காதில் விழுந்தது: நான் செய்யாத ஒரு காரியம். அசிங்கமான அந்த காரியம் நான் செய்ததாக சொல்லப்பட்டது. ஆனால் அதைக்*

*குறித்து நான் இதுவரைக்கும் யாரோடும் கதைக்கவில்லை. ஆனால் அவர்கள் சொன்ன அந்த தவறை நான் செய்யக்கூடாது என்பதற்காக இதுவரைக்கும் கவனமாக இருக்கின்றேன்.* ஏனென்றால் அந்தக் காரியத்தில் நான் ஆண்டவருக்காய் நிற்கின்றேன் என்று நிரூபித்துக் காட்ட வேண்டும். அதற்கு நாட்கள், காலங்கள் செல்லும், வேதனைகள சூழும், ஆனாலும் நான் ஆண்டவருக்காய் நிற்கின்றேன். உங்களைக் குறித்து எதுவானாலும் சொல்லட்டும், நீங்கள் தேவனுக்காய் நில்லுங்கள்.

*எங்களுடைய சபைக்கு ஒரு ஐயா வந்தார். அவருக்கு இப்பொழுது இரண்டு கண்களும் தெரியாது. ஆனால் ஆலயத்திற்கு வரும் போது நன்றாகத் தான் வந்தார், பிற்பாடு கண்கள் தெரியாமல் போய்விட்டது. அதனோடு வேதனையான காரியம் என்னவென்றால்; அவருடைய மனைவிக்கு இரண்டு காதுகளும் கேட்காது. கூடவே அவருக்கு பாரிசவாதமும் வந்து ஒரு பக்கம் இழுத்துக் கொண்டது. இவர்களை நான் சந்தித்து வந்தேன். இவர் தான் இவருடைய மனைவியின் காரியங்களை செய்வது, ஆனால் இவருக்கோ கண்கள் தெரியாது. இப்படிப்பட்ட நிலையிலும் அவர் தன்னுடைய மனைவியை கவனித்து வருகின்றார். மிகவும் வேதனை நான் இறுதியாக அவரிடம் செல்லும் போது கேட்டேன், ஐயா இப்படிப்பட்ட காரியம் உங்களுக்கு கடினமாய் இருக்கும் தானே என்றேன். அதற்கு அந்த ஐயா, இவ்விதமாக கூறினார்; தம்பி என்னதான் செய்தாலும் அவளை நான் கைபிடிக்கின்ற போது வாக்கு கொடுத்தேன். அதை நான் சாகுமட்டும் காத்துக் கொள்ளத்தானே வேண்டும் என்றார். இது தான் உடன்படிக்கையை காக்கின்ற இருதயம்.*

இந்த நாட்களில் கிறிஸ்தவர்களுக்கு இருக்கின்ற முக்கியமான உடன்படிக்கை என்னவென்றால் தேவனோடு, சபையோடு மற்றும் திருமணத்தின் போது உடன்படிக்கை செய்கின்றோம். இவைகளை நாம் காத்துக் கொள்ள வேண்டும். திருமணம் செய்கின்ற போது உன்னைக் கனப்படுத்தி, காப்பாற்றி ஆதரிப்பேன் என்று வாக்குக் கொடுக்கின்றோம். ஆனால் வேதனை என்னவென்றால அனேக கிறிஸ்தவர்கள், இரட்சிக்கப்பட்டவர்கள் இந்த வார்த்தையைக் காத்துக் கொள்ளத் தவறுகின்றோம். ஒரே சரீரம் என்று சொல்லுகின்றோம், ஆனால் அனேக வேளைகளில் அனேக கிறிஸ்தவர்கள் அதை மறந்து போகின்றார்கள். சபையிலே தேவனுக்கு முன்பாக உடன்படிக்கை செய்கின்றோம், விசேஷமாக இந்தக் காரியத்தை காத்துக் கொள்ள வேண்டும். பிரியமான தேவ ஜனமே எந்த நேரத்திலும் உடன்படிக்கைகளை உடைக்கவே கூடாது. நீங்கள் திருமணம் செய்தவராக இருந்தால் நீங்கள் மரிக்கும் வரைக்கும் அவர் தான் உங்கள் துணை. **ஒரு வாழ்க்கைத் துணையே போதும், அது போன்று ஒரு சபையே போதும்; அத்துடன் ஒரு இயேசுவே போதும்.** இதிலே தான் எங்களுடைய சந்தோஷம் இருக்கின்றது.

*றம்புட்டான் பழம் போன்ற ஒரு பூ பூக்கக்கூடிய கன்று ஒன்றை ஒரு சகோதரன் தந்தார். அதை வீட்டில் நாட்டினேன். அது வளர்ந்து பெரிய மரமாக மாறியது. அந்த மரத்தின் தோற்றத்தை பார்த்தால் காட்டுப்பூவரசின் தோற்றமாயிருக்கும். இதைப் பார்த்துவிட்டு அயல்வீட்டு பெண் ஒருவர் இந்த மரத்தை இதிலே வைத்திருக்கின்றார்களே, இது காட்டுப்பூவரசு என்று தங்களுக்குள்ளே கதைத்திருக்கின்றார்கள். ஆனால் இப்போது அந்த மரம் அழகான பூக்களை பூத்து மிகவும் அழகாக இருக்கின்றது. இதனைப் பார்த்த அந்த பெண் என்னுடைய மனைவியை அழைத்து, புத்தியில்லாமல் காட்டுப்பூவரசைக் கொண்டு வந்து வீட்டிலே நட்டிருக்கின்றார்கள் என்று கதைத்தோம்,*

*ஆனால் இப்போது தான் தெரிகிறது இதன் உண்மையான அழகு என்றாராம்.*

இது போன்று தூற்று வார் தூற்றட்டும், பழிப்பார் பழிக் கட்டும், நீங்கள் யார் என்று நிரூ பித்துக் காட்டுங்கள். ஆனால் இன்னும் சிலர் ஆரம்பத்தில் நன்றாக இருப்பார்கள். திடீரென்று அவர்களுக்கு நான் ஒரு தலை மைப் போதகராக ஆக வேண்டும் என்ற ஆசை ஏற்படுகின்றது. இன்றைய நாட்களில் தாங்கள் துரோகிகள் என்பதை அனேகர் நிரூபித்துக் கொண்டிருக்கின்றார் கள். தாங்கள் செய்து கொண்ட உடன்படிக்கைகளை உடைத்து உண்மையற்றவர்கள் என்பதை நிரூபிக்கின்றார்கள். ஆனால் நீங் கள் உண்மை யுள்ள தேவனுடைய பிள்ளைகள் என்பதை நிரூபிக்க வேண்டும். கீழ்ப்படிவுள்ளவர்கள், சாந்தமும் அமைதியுமுள்ளவர்கள் என்பதை நிரூபிக்க வேண்டும். ஆண்டவருடைய வார்த்தையின் படி வாழுகின்றவர்கள் என்பதை நிரூபிக்க வேண்டும்.

சாதாரணமாக ஒரு வங்கியை எடுத்துக் கொண்டால் அதற்கு அனேக கிளைகள் இருக்கும். அவ் வாறு இருக்கும் ஒரு வங்கிக் கிளைக்கு பொறுப்பான முகாமை யாளர் இந்த கிளையை நான் எனக் கென்று எடுத்துக் கொள்ளப் போகின் றேன் என்ற ஒரு எண்ணம் வந்து அப்படிச் செய்தால் அடுத்த நாளே அவரை சிறையில் போட்டு விடு வார்கள். ஆனால் திருச்சபைகளில் எப்படி வந்தோம் என்பதை மறந்து சபைகளில் உள்ள ஆத்து மாக்களை கொள்ளையடித்துச் செல்கின்றார்கள். தேவன் கொடுத்த கிருபையை தவறாய் பயன்படுத்து கின்றார்கள். கிருபையை பயன் படுத்தி அநியாயம் செய்கின்றார் கள், நாச மோசம் பண்ணுகின்றார் கள். பிரியமான தேவனுடைய ஜனமே கிறிஸ்தவ வாழ்க்கையா னது தேவனுடைய திட்டத்திற்கு உட்பட்டது. கிறிஸ்தவத்திற்குள் தாங்கள் விரும்பிய விளையாட் டுக்களை செய்கின்றார்கள், ஆத்து மாக்களை கெடுக்கின்றார்கள். உடன்படிக்கைக்கு துரோகம் பண்ணுகின்றார்கள்.

**சங்கீதம் 44:18 நீர் எங்களை வலுசர்ப்பங்களுள்ள இடத்திலே நொறுக்கி, மரண இருளினாலே எங்களை மூடியி ருந்தும்** விஷப்பாம்பு, இருள் இரண்டும் ஒரே இடத்தில் இருக் கின்றது. *பாம்பு என்றால் படையும் நடுங்கும்* என்பதாக பழமொழி ஒன்று கூறு வார்கள். இப்படி இருந்தும் சங் கீதக்காரன் சொல்கின்றார்: எங்கள் இருதயம் பின்வாங்கவுமில்லை, எங்கள்காலடி உம்முடைய பாதையை விட்டு விலகவுமில்லை. தேவனே நீர் காட்டும் பாதை இது என்றால் நான் சந்தோஷமாக நடப்பேன் என்றான். தேவன் காட்டுகின்ற எந்தப் பாதையையும் விட்டு திரும்பக்கூடாது. இது தான் தேவன் காட்டிய வழி, இது தான் சிறந்த பாதை. ஆகவே அதனா லேயே செல்ல வேண்டும். அந்த பாதையால் சென்று தான் ஆக வேண்டும். ஆண்டவர்தான்எங்களை தெரிந்து கொண்டார், அவர் தான் பாதை காட்டுகின்றார். நாம் ஏன் பயப்பட வேண்டும். ஆண்டவர் காட்டும் வழியாக இருந்தால் அதில் நம்பிக்கை வையுங்கள்.

இப்படிப்பட்ட பயங்கர மான காரியங்கள் ஏற்படுகின்ற போது, வலுசர்ப்பமுள்ள இடங் களில் கொண்டு சென்று விடப்படு

கின்ற போது நாங்கள் எங்கள் தேவனுடைய நாமத்தை மறந்து அந்நிய தேவனை நோக்கி கையெடுத்திருந்தோமானால் என்று சங்கீதக்காரன் பாடுகின்றார். என்னதான் நடந்தாலும் தேவனைப் போல ஒரு தேவன் இல்லை, வேறு ஒரு இரட்சகர் இல்லை. **சங்கீதம் 44:21 தேவன் அதை ஆராய்ந்து. விசாரியாதிருப்பாரோ? இருதயத்தின் அந்தரங்கங்களை அவர் அறிந்திருக்கிறாரே.** அப்படியானால் இதன் முடிவு என்னவென்றால், எல்லாம் வந்தது ஆனால் நாங்கள் உம்மை விட்டுப்போகவில்லை. மாற்ற முடியாத வியாதி வந்தாலும் நாங்கள் அந்நிய கோவில்களில் சென்று நூல் கட்டவில்லை, மந்திரவாதியிடம் செல்லவும் இல்லை, தேவனை விட்டு இன்னொரு தேவனை நாடவுமில்லை என்பதையே சங்கீதக்காரன் கூறுகின்றார். கிறிஸ்தவர்கள் என்றால் இரத்தம், வியர்வை, கண்ணீர் இதைத் தான் பெற்றுக் கொள்ள முடியும். இயேசு கெத்சமனே தோட்டத்தில் இதைத்தான் அனுபவித்தார். அவர்கள் எங்களுக்காய் சிந்திய இரத்தம், கண்ணீர், வியர்வையை நினைத்துக் கொள்ளுங்கள். இது தான் ஆண்டவர் எங்களுக்காய் வைத்திருக்கின்ற வழி. இவைகள் மத்தியில தேவனுடைய சித்தத்தை இயேசு கிறிஸ்து செய்து முடித்தது போல நாங்களும் இவைகள் மத்தியில் ஆண்டவருடைய சித்தத்தை நிறை வேற்றி முடிக்க வேண்டும். வாழ்த்து வார் வாழ்த்தட்டும், தூற்றுவார் தூற்றட்டும். இதன் மத்தியிலும் நாங்கள் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றி முடிக்க வேண்டும்.

**ரோமர் 8:36-39 (36.) கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ?37. இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூறுகிறவராலே முற்றும் ஜெயங் கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே. 38. மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், 39. உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித திருக்கிறேன்.** என்றான் அப்போஸ்தலனாகிய பவுல். உண்மைக் கிறிஸ்தவன் என்பதை நிரூபித்து வாழ்ந்து காட்டு.

**"ஆண்டவர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக"**

**போதகர்**
**வேதநாயகம் மகாராஜா**

**2014 வாக்குத்தத்த வசனம்:**

**"சீயோனில் வாசமாயிருக்கிறவளே, நீ சத்தமிட்டுக் கெம்பீரி; இஸ்ரவேலின் பரிசுத்தர் உன் நடுவில் பெரியவராயிருக்கிறார்".**
**- ஏசாயா 12:6 -**

# சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள்
உங்களது பெயரையும் விலாசத்தையும் தெளிவாக எழுதி
சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பினால்
சந்தாதாரர்களாகச் சேர்க்கப்படுவீர்கள்.

## சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

| | |
|---|---|
| இலங்கை | S.L Rs 140.00 Per Year |
| இந்தியா | S.L Rs 390.00 Per Year |
| கனடா, அமெரிக்கா | S.L Rs 840.00 Per Year |
| சிங்கப்பூர், மலேசியா | S.L Rs 420.00 Per Year |
| மத்திய கிழக்கு நாடுகள் | S.L Rs 510.00 Per Year |
| ஜேர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, அவுஸ்ரேலியா | S.L Rs 720.00 Per Year |

(காசோலை, காசுக்கட்டளை "சீயோன் தேவாலயம்" / "ZION CHURCH" என எழுதப்பட வேண்டும்)

சந்தாதாரராக விரும்பின் கூப்பனை தயார் செய்து அனுப்பவும்

## சந்தா கூப்பன்

பெயர் : ........................................................

விலாசம் : ........................................................

........................................................

........................................................

........................................................

தயவு செய்து சந்தா பணத்தையும் சேர்த்து அனுப்பவும்.

Zion Church Office,
No. 347, Navalar Road,
Jaffna, Srilanka.

To: ..................................................

..................................................

..................................................

..................................................